# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
***********

முறையீட்டு மனு எண்: 170/2018/பே
ஆணை நாள் 23 –01–2019

திரு. M. ஆறுமுக நயினார்,
உரிமையாளர்,
கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி,
2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
மைலாப்பூர்,
சென்னை – 600 004.

-- முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
கழுகுமலை பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம். -- எதிர் மனுதாரர்.

ஆணை

திரு. எம். ஆறுமுக நயினார், மைலாப்பூர். சென்னை–4 என்பவரின் 26.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 30.07.2018ல் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.170/2018 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீதான அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் தனது முறையீட்டு மனுவில், தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை பேரூராட்சியில் புராதான நகர மேம்பாட்டு 2014–15 திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு தனது நிறுவனம்(கிரீன்வேஸ் அட்வர்டைசிங் அண்டு பப்ளிசிட்டி) மூலம் செய்தித் தாள்களில் விளம்பரம் செய்யப்பட்ட வகையிலான விளம்பரக்கட்டணம் ரூ.31,632/–க்கான பட்டியல் எண்.439/2015–16 நாள் 13.02.2016ன்படி கழுகுமலை பேரூராட்சிக்கு அனுப்பப்பட்டது எனவும், இதுவரை மேற்படி தொகை விடுவிக்கப்படவில்லை எனத் தெரிவித்து விசாரணை கோரி இம்முறைமன்ற நடுவத்தில் தனது முறையீட்டினை சமர்ப்பித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 07.08.2018 நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து கழுகுமலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

இம்முறைமன்ற நடுவ 17.09.2018 நாளிட்ட அழைப்பாணையினைத் தொடர்ந்து, 10.12.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் முறையீட்டு மனுதாரரின் சார்பில் ஆஜரான

திரு.கே.சிவராமன் தனது வாக்குமூலத்தில், 26.07.2018 நாளிட்ட முறையீட்டு மனு தங்களால் அனுப்பப்பட்டதாகவும். அதில் 2016–ஆம் ஆண்டு கழுகுமலை பேரூராட்சி குறித்து மேற்படி பேரூராட்சியின் வேண்டுகோளுக்கிணங்க பத்திரிக்கைகளில் ஒப்பந்தப்புள்ளி தொடர்பான விளம்பரம் வெளியிட்ட வகையிலான விளம்பரத் தொகை ரூ. 31,632/– கடந்த இரண்டு ஆண்டுகளாக நிலுவையாக உள்ளதாகவும், அதனை வழங்கிட உரிய ஆணையிடுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

14.12.2018 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில், முறையீட்டு மனுதாரரின் மேற்படி வாக்குமூல நகல் கழுகுமலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பி வைக்கப்பட்டு, முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு மீதான நடவடிக்கைகள் குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்க ஆணையிடப்பட்டது.

தற்போது 02.01.2019 நாளிட்ட முறையீட்டு மனுதாரரின் கடிதத்தில் தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை பேரூராட்சி செயல் அலுவலரால், மேற்படி புகாரில் தெரிவிக்கப்பட்ட விளம்பரத் தொகை ரூ.31,632/– பேரூராட்சி அலுவலக காசோலை எண். 375430/நாள் 20.12.2018ன் மூலம் பெறப்பட்டுவிட்டதாக தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மேற்படி முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள நிலுவைத் தொகை இம்முறைமன்ற நடுவ நடவடிக்கைகளுக்குப் பின்னர் கழுகுமலை பேரூராட்சி செயல் அலுவலரால் பட்டியல் சரி செய்யப்பட்டு, மனுதாரரது கோரிக்கை பூர்த்தி அடைந்தமைக்கான ஒப்புதல் கடிதத்தினை முறையீட்டு மனுதாரரே அளித்துள்ள நிலையில் இப்பொருள் தொடர்பான தொடர் நடவடிக்கையினை கைவிட முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2019–ஆம் ஆண்டு, ஜனவரி திங்கள் 23 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளர். 5/2/2019

5/2/19

பெறுநர்

1.திரு. M. ஆறுமுக நயினார்,
உரிமையாளர்,
கிரீன்வேஸ் அட்வர்டைசிங் & பப்ளிசிட்டி,
2, வெங்கடேச அக்ரஹாரம் சாலை,
மைலாப்பூர்,
சென்னை – 600 004.

2.செயல் அலுவலர்,
கழுகுமலை பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
திருநெல்வேலி மண்டலம்,
என்.ஜி.ஓ. பி.காலனி, ஜவஹர் நகர்,
பெருமாள்புரம் அஞ்சல்,
திருநெல்வேலி – 627007